மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்

# RCOP.NO.30/2023

# Old.No.125/2016

## PW 1

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Tr Nandhagopal | மதம் | : |
| தந்தை / கணவர் பெயர். | : Tr.Deenadayalan | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனு சொத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை பிளாட் எண்.35 மற்றும் 36 என்று மட்டும் தெரியும். மனு சொத்திற்கான மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தோராயமாக 4960 சதுர அடி ஆகும். இம்மனுவில் நான் எதிர்மனுதாரர் மனு சொத்தில் 12 வருடங்கள் வாடகை செலுத்தி வராததால் அவரை மனு சொத்திலிருந்து காலி செய்ய பரிகாரம் கோரியுள்ளேன். மனு சொத்தை குறித்து 6 வழக்குகள் நிலுவையில் உள்ளது. ஆர்.சி.ஓ.பி எண். 45/2023 நிலுவையில் உள்ளது. அம்மனுவில் நான் குமார் என்பவர் வாடகை செலுத்தி வராமல் வாடகை இருந்து வருவதால் அவரை மனு சொத்திலிருந்து காலி செய்திட மனு சொத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அந்த மனுவில் 35,36 எண்ணில் உள்ள இடத்தில் உள்ள கீழ் பகுதியை குமார் என்பவருக்கு வாடகை விட்டுள்ளேன்.

அளவு எவ்வளவு என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் கீழ் பகுதி என்று தான் குறிப்பிட்டுள்ளேன்.

மனு சொத்தை குறித்து ஆலந்தூர் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண். 750/2012 என்று தாக்கல் செய்து தற்போது இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 1090/2023 வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கை குமார் என்பவர் நான் வழக்கு சொத்தில் உள்ளே நுழையக் கூடாது என்றும், விற்பனை செய்ய கூடாது என்றும், சட்டத்திற்கு புறம்பாக நான் மனு சொத்திலிருந்து அவரை காலி செய்ய கூடாது என்றும் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். குமார் என்பவர் தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.153/2014 என்று தாக்கல் செய்து அவை ஆலந்தூர் சார்பு நீதிமன்றத்தில் 569/2021 ஆக பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மேலும் அசல் வழக்கு எண்.514/2014 என்று ஆலந்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அவை இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு 28/2023ஆக நிலுவையில் உள்ளது. ஆர்சிஓபி மனு எண். 45/2023 மற்றும் இம்மனுவை தவிர மற்ற வழக்குகளை குமார் என்பவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆம். அசல் வழக்கு எண். 28/2023ல் குமார் என்பவர் நான் மனு சொத்தினை வேறு மூன்றாம் நபருக்கு விற்பனை செய்யகூடாது என்றும், போலீஸசார் தலையிட கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆம். 2ம் எதிர்மனுதாரர் மேற்படி வழக்குகளில் எனக்கும் அவருக்கும் உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் என்ற உறவுமுறை இருப்பதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆம் ஆனால் அதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

மனு சொத்தில் எதிர்மனுதாரர் வாடகைதாரர் என்பதை நிருபிக்க ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் அளித்த மூன்று காசோலை உள்ளது. மனு சொத்தை குறித்து வாடகை ஒப்பந்தம் ஏதேனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் ஆம். அவ்வாறு வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 3 காசோலைகளை வாடகைக்காக கொடுக்கப்பட்டது என்று ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் காசோலையின் பின் பக்கத்தில் குறிப்பிட்ட மாதத்திற்கான வாடகை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி குறிப்பிட்டுள்ள காசோலைகளை 2ம்

எதிர்மனுதாரர் எங்களுக்குள் ஏற்பட்ட பரிவர்த்தனைக்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் மேற்படி காசோலைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நானும் 2ம் எதிர்மனுதாரரும் ஒன்றாக தொழில் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 2ம் எதிர்மனுதாரரும் நானும் தொழில் செய்து வருவதாக பதில் உரையில் குறிப்பிட்டுள்ளதை நான் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. மனு சொத்தினை கிரையம் பெற்றமாக சொல்லப்படுவதை உண்மைகளை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு சொத்தினை கிரையம் போதுவதற்கு முன்பு கிரையம்ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதா என்றால் ஆம். அந்த கிரைய ஒப்பந்தத்தில் நானும் 2ம் எதிர்மனுதாரரும் கிரைய ஒப்பந்தகாரர் ஆவோம். நில உரிமையாளர் பிரசாத் என்பவர் மோகன் என்பவருக்கு பொது அதிகாரம் அவர் எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார். மேற்படி கிரைய ஒப்பந்தத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம்.

எனது மனுவியிலும், சட்ட அறிவிப்பிலும் வாடகை ஒப்பந்தம் வாய்மொழியாகவோ எழுத்து பூர்வமாக குறிப்பிடப்படவில்லை என்றால் ஆம். 2ம் எதிர்மனுதாரர் வாடகை ஒப்பந்ததாரர் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.